**World Christian Fellowship**
www.wcflondon.com
wcflondon@gmail.com

# How a man of God should be?

**2 Kings 5:1-19**,

1. சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு **கர்த்தர்** சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்.
2. சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறுபெண்ணைச் சிறைபிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள்.
3. அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.
4. அப்பொழுது அவன் போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான்.
5. அப்பொழுது சீரியாவின் ராஜா: நல்லது போகலாம், இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான்; அப்படியே அவன் தன் கையிலே பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டுபோய்,
6. இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக்காரனாகிய நாகமான் கொண்டுவருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கிவிட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது.
7. இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கிவிடவேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்கவும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்கச் சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள் என்றான்.
8. இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான்.
9. அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.
10. அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான்.

11. அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப் போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய **கர்த்தருடைய** நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்.
12. நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிறதற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லாவற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப்போனான்.
13. அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்.
14. அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.
15. அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான்.
16. அதற்கு அவன்: நான் வாங்குகிறதில்லை என்று **கர்த்தருக்கு** முன்பாக அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்கவேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான்.
17. அப்பொழுது நாகமான்: ஆனாலும் இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கத்தக்க இரண்டு பொதி மண் உமது அடியேனுக்குக் கட்டளையிடவேண்டும்; உமது அடியேன் இனிக் **கர்த்தருக்கே** அல்லாமல், அந்நிய
தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை.
18. ஒரு காரியத்தையே **கர்த்தர்** உமது அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் பணிந்துகொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்குக் கைலாகு கொடுத்து ரிம்மோன் கோவிலிலே பணியவேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணியவேண்டிய இந்தக் காரியத்தைக் **கர்த்தர்** உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான்.
19. அதற்கு அவன்: சமாதானத்தோடே போ என்றான்; இவன் புறப்பட்டுக் கொஞ்சதூரம் போனபோது,

எல்லோரும் அறிந்த வேதாகம பகுதி. இந்த பகுதியை கட்டாயம் நீங்கள் ஒரு முறையாவது முன்பு கேட்டிருப்பீர்கள். ஆனால் நான் வேறு கோணத்தில் தேவ மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்று பார்க்க விரும்புகிறேன்.

நாகமான்

சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக்

கொண்டு **கர்த்தர்** சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்.

நாகமான் என்றால் மகழ்ச்சியான, இனிமையான, அழகான என்று அர்த்தம். இது ‘‘கருணைமிக்கவர்’’ அல்ல நன்கு தேர்ந்தவர் என்ற நோக்கில் உள்ளது. வேதத்தில் உள்ள நபர்களின் பெயர்கள் அந்த மனிதனை பற்றியும் அவனுடைய குணாதிசயங்களையும் விவரிப்பதாக அந்த பெயர்கள் சூட்டப்பட்டுள்ளது.

அவனுடைய பெயரின் அர்த்தத்தின் நிமித்தம், அவன் குஷ்டரோகத்திற்கு முன்பாக அழகாக இருந்திருக்கலாம். அதே போல இரக்கமும், இனிமையானவனாகவும் இருந்திருக்கலாம். ஆனால் இந்த குஷ்டரோகத்தினிமித்தம் அவனுடைய தோற்றம் இதற்கு எதிராக இருக்கிறது.

ஆதியிலே தேவனுடைய சாயலில் அழகாக படைக்கப்பட்டிருந்த மனிதன் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து போனான்.

இன்று சாதரணமாக ஒரு மனிதன் மற்ற மனிதனை எப்படி வெளிப்புறமாக அவனுடைய தோற்றத்தை வைத்து நிதானிப்பானோ அதே போல இந்த வேத பகுதியும நாகமானுடைய வீரத்தையும் மற்ற செயல்களையும் கூறுகிறது.

**அவன் பதவி**

சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்;

அவன் உயர்ந்த பதவியிலும் அதிகாரத்திலும் இருந்தான்.

**His popularity and prestige.**

**அவன் புகழ் மற்றும் கௌரவம்**

அவன் புகழ் பெற்ற மனிதன். ஆண்டவர் அவனை கொண்டு எதிரிகளிடம் இருந்து பல வெற்றிகளை பெற்று தந்ததால் சீரிய தேசத்தின் புகழ் பெற்றவனாய் இருந்தான்.

அவனுடைய தலையில் சிகரமும், அவனுடைய மார்பில் பதக்கங்களும் இருந்தது.

தேவன் பார்வோனையோ, அசிரியா ராஜாவையோ அல்லது பாபிலோன் ராஜாவையோ தன்னுடைய பணிக்காக உபயோகப்படுத்தவில்லை ஆனால் நாகமானை உபயோகப்படுத்தியிருந்தார்.
ஆண்டவர் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற இரட்சிக்கப்பட்டவர்களையோ அல்லது இரட்சிக்கப்படாதவர்களையோ ஒரே விதமாக உபயோகப்படுத்துகிறார்.

**அவனுடைய பிரச்சனை**

அவன் குஷ்டரோகியாய் இருந்தான. அந்த குஷ்டரோகம் அவனுக்கு பிரச்சனையாய் இருந்தது.
குஷ்டரோகம் என்பது பாவத்திற்கு இணையாகவும், ஒரு மனிதனுடைய ஆவிக்குரிய நிலையை உணர்த்துவதாகவும் வேதாகமத்தில் உள்ளது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல் இரட்சிப்பு (ஆவிக்குரிய குணமடைதல்) இல்லை.

மனிதர்கள் காண்கிற விதமாக அல்ல நாம் நம்மை ஆவிக்குரிய பார்வையில் பார்க்க வேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் மூலமாக இரட்சிப்பை பெறாவிட்டால், ஆவிக்குரிய வாழ்வில நாமும் குஷ்டரோகிகளே.

இந்த குஷ்டரோகம் என்ற வார்த்தை மூலம் நாகமானை உலக மனிதர்கள் அவனை வேறுவிதமாக நோக்கலாம் ஆனால் தேவனின் பார்வையில் நாகமானின் உண்மை நிலையை கண்டறியலாம்.

இன்றைய நிலையில் நிறைய பேர் குஷ்டரோகம் என்ற பாவத்தில் மரிக்கிறார்கள். ஒருவன் உலகபிரகாரமான கனத்திலும், வல்லமையிலும், பெலத்திலும், செல்வத்திலும் அதிகம் வெற்றி பெற்றிருக்கிறான், ஆனால் அவனுடைய ஆவிக்குரிய வாழ்வோ தோல்வி. ஒருவன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்வின் தொலைந்து போன நிலையை உணர்ந்து அதிலிருந்து வெளி வர எடுக்கும் முதல் படியே அவனை இரட்சிப்புக்கு நேராக கொண்டு செல்கிறது.

**சீரிய தேசத்து அடிமை பெண்**

ஆண்டவர் தம்முடைய வார்த்தையை எவ்விதமாக இந்த உலகத்திற்கு கொண்டு செல்கிறார் என்று இங்கே பார்க்கிறோம். ஒருவனுடைய இருதயம் ஆயத்தமாயிருந்தால் அவனை தேவனுடைய வார்த்தையை கொண்டு செல்வதற்கு அவனை பயன்படுத்துகிறார்.

இங்கே ஒரு சிறு அடிமை பெண் மூலம் தேவனுடைய வார்த்தை கடத்தப்படுகிறது. நாகமான் அவன் அநீதியாக அதாவது போர் செய்து அடிமையாக கொண்டு வந்த சிறு பெண் ஆண்டவருடைய அன்பை வெளிப்படுத்துகிற கருவியாக பயன்படுத்தப்படுகிறாள்.

**நாகமான் ஏன் இந்த அடிமை பெண்ணின் வார்த்தையை கேட்க வேண்டும்?**
ஒரு அடிமை பெண்ணுக்கு என்ன தெரியும் என்று சொல்லாமல், ஒரு வேளை அந்த அடிமை பெண்ணின் சாட்சியான வாழ்கை நிமித்தம் நாகமான் அவளுக்கு செவி சாய்த்திருக்கலாம்.

**நாகமானின் இஸ்ரேல் பிரயாணம்.**
ஒரு சராசரி மனிதனுடைய உலகப்பிரகாரமான தேவை ஒரளவு சந்திக்கப்பட்டாலும், அவனுடைய முக்கியமான தேவை அவனுக்கு குஷ்டரோகத்திலிருந்து சுகம்.

அவன் தன்னுடைய பதவி, அந்தஸ்து, பணத்தில் நம்பிக்கை வைத்திருந்தான். பண்த்தினால் சம்பாதிக்ககூடிய காரியங்களை சிந்தித்தான் ஆனால் அவன் தேவனுடைய கிருபையை அறியவில்லை.

**எலிசாவின் அழைப்பு**

8. **இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்ட செய்தியை தேவனுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வானேன்? அவன் என்னிடத்தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான்.**

9. **அப்படியே நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.**
நாகமான் அவனுடைய தங்கத்தையும், வெள்ளியையும், மெல்லிய உடைகளையும், தன் குதிரைகளோடும், இரதத்தோடும் வந்து எலிசாலின் வாசற்படியிலே நின்றான்.

நாகமான் அவன் தான் உயர்ந்த பதவியில் இருந்ததால் அவன் சிவப்பு கம்பள வரவேற்பை எதிர்ப்பார்த்திருக்கலாம்.

- அவன் சிறந்த படைத்தலைவனாய் இருந்தான்.

- அவன் சீரிய ராஜாவிடம் இருந்து கடிதம் பெற்று கொண்டு வந்திருந்தான்.
- அவன் இஸ்ரவேல் ராஜாவிடத்திலருந்து இப்போது வந்திருக்கிறான்.
- அவன் இஸ்ரவேல் ராஜாவை நேருக்கு நேர் சந்தித்து வந்திருக்கிறான்.

நாகமான் அவனுடைய சுய சிந்தனையில் தான் எவ்வாறு குணமடைய வேண்டும் என்று எண்ணியிருந்தான்.

நாகமானுடைய பதவியையும், பலத்தையும் கண்டு அவன் வரும்பொழுது எலிசா கவரப்படுவார் என்று எண்ணினான்.

நாகமான் அவனுடைய சாதனைகள், தாலந்து, பலம், பதவி மற்றும் பொருட்களினால் பெருமிதம் கொண்டிருந்திருப்பான்.
எலிசா வெளியே வந்து நாகமானின் குஷ்டரோகத்தை தடவி கர்ததருடைய நாமத்தில் சுகப்படுத்துவான் என்று நாகமான் எண்ணியிருந்தான். ஆனால் யோர்தான் நதியில் ஏழு முறை ஸ்நானம் பண்ண சொன்னது அவனுக்கு கடும் கோபத்தை உண்டாக்கியது.

**ஆனால் யார் இந்த நாகமான்?**
தேவன் தாம் நாசியின் சுவாசத்திலே உண்டான ஒரு மனிதன், ஒரு கடவுளின் படைப்பு.

அவனுடைய பதவி, வெற்றி, சாதனைகள் எல்லாம் அண்ட சராசரங்களை படைத்த தேவனால் உண்டானது.

**பெருமையான மனிதனை குறித்து வேதம் என்ன கூறுகிறது.**

தேவன் வெறுக்கிறார்!

**Proverbs 6:17**, அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை

**Proverbs 11:2**, அகந்தை வந்தால் இலச்சையும் வரும்; தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு.

**Proverbs 16:18**, அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.

**Proverbs 29:23, கர்த்தருக்குப்** பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது

**எலிசாவின் கட்டளை.**

எலிசா இந்த சம்பவத்தில் செய்தது மரியாதை இல்லாத செயல் போல காணப்படலாம். இன்னும் சொல்ல போனால் இன்றைய அரசியல் சூழல் அதிகரித்த சமுதாயத்தில், பல சபையினரால் எலிசா குற்றம்சாட்டப்பட்டிருப்பார்.

எலிசாவின் செயல் அன்பில்லாத, மரியாதையில்லாத மற்றும் ஆணவமிக்க செயல் போல காணலாம். ஆனால் எலிசா செய்தது அன்பின் நிமித்தமே. அது நாகமானின் பெருமையை அவனுக்கு எடுத்துக்காட்டவும், அவன் கர்த்தருடைய கிருபையை பெறவும் அவரோடு சேர்க்கப்படவும் உண்டான செயல்.

நாகமான் எலிசாவின் சொன்னதனிமித்தம் கோபம் அடைந்தான். இருந்தபோதிலும் எலிசா அவன் பின் செல்லவில்லை.

எலிசா கர்த்தரின் பக்கம் இருந்தான், அங்கே தேவன் நாகமானின் சேவகன் மூலம் அவனுக்கு உணர்வுண்டாககினார், அதன் மூலம் அவன் எலிசாவின் வார்த்தைக்கு செவி கொடுக்க தொடங்கினான்.

ஒரு மனிதனுடைய அகங்காரமும், அவனுடைய பெருமையும் ஆண்டவரிடம் திரும்புவதற்கு தடையாக இருக்கிறது. நாம் நம்முடைய நிலையை அறிவோமானால் நாம் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம். நாம் ஆண்டவருடைய சித்தத்திற்கு தடையாக இருக்க கூடாது.

இன்றைய கால நிலையில் உள்ள போதகர்கள் என்ன செய்திருப்பார்கள்?
ஏன் ஆண்டவருடைய வசனத்தை கொடுக்கும் பிரசங்க பீடத்தை உலகபிரகாரமான மக்களுக்கு, பிரபலமானவர்களுக்கு கொடுக்கிறார்கள்?
ஒரு பிரசங்கியார் பிரசங்க பீடத்தின் பரிசுத்தத்தை உபதேசிப்பதும், காலணி அணியாமல் இருக்கவும் வலியுறுத்துகிறார். ஆனால் அவரே ஒரு அரசியல்வாதி அப்படி செய்ய அனுமதிக்கிறார்.

ஏன் ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதி வெற்றி பெற வேண்டும் என்று போதகர் ஜெபிக்க வேண்டும்?
அவர் அதன் மூலம் அரசிலிருந்து சலுகைகளை பெற வேண்டும் என்றா?

நாகமான் அவனுடைய வேலைக்காரன் சொன்னதை செய்தான்.
அவன் ஏழு முறை குளத்தில் மூழ்கி எழுந்து சுகம் பெற்றான்.

நாகமான் திரும்பி எலிசாவை காண வந்தான்.

முன்பு எலிசாவை பார்க்க வந்து அவனை பார்க்காத நாகமான இப்பொழுது எலிசா தீர்க்கத்தரிசியை முகமுகமாக கண்டு பேசுகிறான்.

**காணிக்கையை வாங்க மறுத்த எலிசா**

**V 15, அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான்.**

நாகமான் விருப்பத்தோடு காணிக்கை கொடுத்தான்.

**எலிசா என்ன செய்யவில்லை (இந்த காலத்து ஊழியர்கள் போல)**

அவன் ஒரு கூட்டம் கூட்டி தன்னுடைய செயலை சொல்லவில்லை.
அவன் எந்த ஒரு காணொளியையும் போடவில்லை.
அவன் எந்த ஒரு பத்திரிக்கையிலும் வெளியிடவில்லை.
அவன் எந்த ஒரு சாட்சி காணொளியை போடவில்லை.

**V 16, அதற்கு அவன்: நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்கவேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான்.**

நான் ஒன்றும் வாங்குவதில்லை!
அவன் வற்ப்புறுத்தியும் எலிசா வாங்கவில்லை

ஒரு பக்கம் நாகமான் தான் கடன்பட்டவனாக செல்ல பயந்தான்.
மறுபக்கம் இதை தான் எலிசா எதிர்ப்பார்த்திருக்க கூடும். ஏனென்றால் அப்பொழுது தான் நாகமான் தனக்கு சுகம் தந்த தேவனுக்கு எப்பொழுதும் கடன்பட்டிருக்க அது வாய்ப்பாக இருக்கும். எலிசா ஒரு வேளை காணிக்கை வாங்கியிருந்தால் நாகமான் தேவன் தந்த சுகத்தை மறந்து போகலாம்.

மாறாக அவன் எப்பொழுதும் தேவனுக்கு கடன்பட்டிருக்க அது அவனுடைய வாழ்கைமுறையாக மாற எலிசா சித்தம் கொண்டிருக்கலாம்.

காணிக்கையை வாங்காமல் இருப்பதால் மட்டும் நாகமான் எப்பொழுதும் தேவனுக்கு கடன்பட்டிருப்பான் என்று கூற முடியாது ஆனால் அவன் வாழ்ந்த சூழலில் அது ஆண்டவரோடு

உள்ள உறவிலிருந்து விலகுவதற்கு எளிதாய் அமைந்திருக்கலாம்.

**2 Corinthians 11:7**, நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்னைத்தானே தாழ்த்தி, தேவனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்குப் பிரசங்கித்ததினாலே குற்றஞ்செய்தேனோ?

**3 John 1:5-7**, பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய்.

6. அவர்கள் உன்னுடைய அன்பைக்குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.

7.ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள்.

*எலிசா என்பதற்கு எபிரெய பாஷையில் ‘‘கர்த்தர் என் இரட்சிப்பானவர்’’ என்று அர்த்தமாம்.*

**V 19**, அதற்கு அவன்: சமாதானத்தோடே போ என்றான்; இவன் புறப்பட்டுக் கொஞ்சதூரம் போனபோது,

நாம் நம்முடைய வாழ்கை செயல்பாட்டின் மூலம். ஒரு பாவியான மனிதன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை தேவன் என்று ஏற்றுகொள்ள வேண்டும்.